

# நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி - திருவாரூர்


# நீதிக்கதைகள்

## ஒன்றாம் வகுப்பு

# 1. வேடனும் புறாவும்



காட்டில் வேடன் ஒருவன் புறாக்களைப் பிடிப்பதற்காக வலை விரித்தான்.



அப்போது , வலையில் ஒரே ஒரு புறா மட்டுமே சிக்கியது.



வேடன் அப்புறாவை வலையிலிருந்து கையில் எடுத்தான்.



அந்த புறா வேடனைப் பார்த்து “வேடரே! என்னை கொன்று விடாதே!என்னை நீ விட்டுவிட்டால் உனக்கு இலாபம் கிடைக்கும் எனத் தந்திரமாக பேசியது.




அதற்கு வேடன், உன்னை பார்க்கும்போது இறைச்சியின் சுவையே உள்ளது. என்று புறாவிடம் கூறினான்.



மேலும் உன்னை விடுவதால் எனக்கு என்ன இலாபம்? என்று கேட்டான்.



அதற்கு , வேடனிடம் புறா , நான் ஒரு புறா மட்டும்தானே கிடைத்திருக்கிறேன்? நீ என்னை விட்டுவிட்டால் என் நண்பர்களையும் அழைத்து வருவேன் என்றது.




உடனே! வேடன் அதை நினைத்து பார்க்கிறான்.



“புறாவே! நீ சொன்னபடி செய்தால் எனக்கு இலாபம்தான்.ஆனாலும், நான் உன்னை விட மாட்டேன் என்றான். உன்னை காப்பாற்றிக் கொள்ள உன் நண்பர்களுக்கே நீ துரோகம் நினைக்கிறாய்.




என்று கூறி அப்புறாவை அவன் வீட்டுக்கு எடுத்து சென்றான்.




அதன்பின், அப்புறாவை வீட்டிற்கு எடுத்து சமைத்து சாப்பிட்டான்.

நீதி :



எந்த, சூழ்நிலையிலும் நம்மை நம்பி இருப்பவருக்கு நாம் துரோகம் நினைக்க கூடாது . அப்படி நினைத்தால் அதுவே , நமக்கு ஆபத்தாக முடியும்.

# 2. தெனாலிராமனும் திருடனும்




பருவ மழை தவறியதால் கிணறு , குளம், குட்டை , ஏரிகள் வற்றிவிட்டன. தெனாலிராமன் வீட்டு கிணறும், அதனால் வற்றி இருந்தன. அதனால் , தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சிரமப்பட்டார் தெனாலிராமன்.



வீட்டு தோட்டத்தில் மறைந்திருந்த திருடர்களைக் கண்ட தெனாலிராமன். அவர்களை வைத்தே தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச திட்டமிட்டார்.



அத்திட்டத்தைப் பற்றி , மனைவியிடம் உரையாடினார்.




திருடர்களுக்கு கேட்கும்படி , “வீட்டிலுள்ள நகை, விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் ஒரு பெட்டியில் போட்டு பூட்டி , கிணற்றில் போட்டு விடலாம் என்று உரக்க கூறினார்.




**தெனாலிராமன், பழைய பெட்டியில் நகைகளை போட்டு வீட்டிற்கு வெளியே எடுத்து வந்தார்.**




**கிணற்றுக்கு அருகில் சென்று,**



அந்தப் பெட்டியை திருடர்களின் காதுக்கு எட்டுமளவுக்கு கிணற்றுக்குள் "தொப்" பென்று போட்டார்.



பெட்டியை கிணற்றிலிருந்து எடுக்க, திருடர்கள் கிணற்றுக்கு அருகில் வந்தனர். திருடர்களில் ஒருவன் அண்ணே! கிணற்றில் கொஞ்சம் தண்ணீர் உள்ளது என்றான். நாம் மூவரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி இரைத்து விடலாம் என்றுகூறினான்.



**அதன்படி ஒருவர் மாற்றி, ஒருவர் ஏற்றம் மூலம் நீரை இறைத்தனர்.**



**திருடர்கள், அப்பெட்டியை கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர்.**



**பெட்டியை திறந்து பார்த்த திருடர்கள் வெறும் கல்லும் , மண்ணும் இருந்ததைப் பார்த்து அதிர்ச்சியானர்.**




**அப்போது தோட்டத்திற்கு வந்த தெனாலிராமன் அவர்களை பார்த்து , "நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்கு போதும். உங்கள் உதவிக்கு நன்றி" என்று கூறினார்.**




தெனாலிராமன் நம்மை ஏமாற்றி தோட்டத்திற்கு நீர் இறைக்க வைத்து விட்டார் என்று திருடர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர்.

**நீதி :**




**“புத்தி கூர்மையே சாலச் சிறந்தது.”**


# 3. நன்றிகெட்ட கிழவன்



ஓர் ஊரில் ஒரு கிழவன் இருந்தான். அவன் தள்ளாமை அடைந்ததால் அவனால் கடலுக்குள் சென்று மீன் பிடிக்க முடியாது.




ஒருநாள் அவன் கடலோரத்தில் பசியோடு நின்று கொண்டிருந்த போது ஒரு அழகான பறவை வந்தது. அது ஒரு தேவலோக பறவை. “பாவம் நீ ! முதுமையால் கஷ்டப்படுகிறாய். நான் தினமும் உனக்கு ஒரு மீன் தருகிறேன். அதைக் கொண்டு பிழைத்துக்கொள்” என்று கூறி அப்பறவை பறந்து விட்டது.




**அன்று முதல் தினமும் ஒரு பெரிய மீனை கிழவன் வீட்டில் போட்டு விட்டு சென்றது அந்தப் பறவை.**




**அந்த மீனை கிழவன் சந்தையில் நல்ல விலைக்கு விற்று ஆதாயமடைந்தான்.**



அந்த ஆதாயத்தால் ஒரு பெரிய வீட்டைக் கட்டினான்.




ஒரு நாள் தண்டோரா ஒலித்தது. அந்தத் தண்டோரா ஒலியைக் கிழவன் கேட்டான். தேவலோக பறவை ஒன்று இந்தப் பகுதியில் வந்து செல்வதாகவும் அரசருக்கு அந்த பறவை தேவையென்றும் அந்த பறவையைப் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு தங்கம் பரிசாகக் கொடுக்கப்படும் என்று தண்டோரா போடப்பட்டது.




“அரசனுக்கு அந்தப் பறவை எதற்காக தேவை” என்று தண்டோரா போட்டவரிடம் கிழவன் கேட்டான். “அரசனுக்குக் கண் தெரியவில்லை. அவர் அந்தப் பறவையின் இரத்தத்தில் குளித்தால் அவருக்குக் கண் பார்வை திரும்பக் கிடைக்கும். அதனால்தான்” என்றான் தண்டோரோ போட்டவன். “உனக்கு அந்தப் பறவை பற்றி தெரியுமா?” என்றான்.



அரசன் கொடுப்பது தங்கம் என்பதால் பேராசையில் ஏதேதோ உளறினான் கிழவன்.



**சந்தேகமடைந்த அரண்மனை காவலர்கள் கிழவனை கைது செய்தனர்.**



**கிழவனை அரசன் முன்னால் நிறுத்தினார்கள் காவலர்கள். பயந்து போன கிழவன், " அது பெரிய பறவை. அதை என் ஒருவனால் மட்டும் பிடிக்க முடியாது" என்றான்.**



**கிழவனுடன், அரண்மனைக் காவலர்களை அனுப்பி வைத்தான் அரசன். கிழவன் வீட்டில் ஒளிந்து கொண்டிருந்தார்கள் காவலர்கள்.**



**அன்று வழக்கம்போல அந்தப் பறவை வந்தது. பறவையை ஏமாற்றி வீட்டிற்குள் அழைத்தான் கிழவன். பறவை வந்ததும் ஓடிப் போய் அதன் கால்களைப் பிடித்துக்கொண்ட கிழவன் காவலர்களைக் கூப்பிட்டான்.**



**சுதாரித்துக்கொண்ட அந்தப் பறவை கால்களைப் பிடித்துக் கொண்டிருந்த கிழவனுடன் உயரப் பறந்தது. கிழவன் இறந்து விடுவோம் என்ற பயத்தில் பறவையின் கால்களைப் பிடித்திருந்த கையை எடுக்கவில்லை.**



**ஆனால், அந்த பறவை அவனை மன்னித்து விட்டுச்சென்றது. கிழவன், அவன் தவற்றை உணர்ந்தான்.**

நீதி:



“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்”

## 4.நேர்மையான அதிகாரி




ஒரு நேர்மையான அதிகாரி. தன்பணிகளில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் லஞ்ச ஊழல்களில் துளியும் ஈடுபடாதவர்.



ஒருநாள் அவரை சில பேர் அணுகி தவறான செயலுக்கு வற்புறுத்தினார்கள். சிறு தவறுதான் அதை செய்தால் போதும் வாழ்நாள் எல்லாம் வளமாக வாழும் அளவுக்கு பணம் கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைகளைக் கூறினார்கள். அதற்கு அவர் ஒருநாள் அவகாசம் கொடுங்கள் எனக் கேட்டார்.



சரி ,சிந்திந்து நல்ல முடிவை சொல்லுங்கள் என்று சொல்லி விடைபெற்றார்.



வீட்டிற்கு செல்லும் வழியில், அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே சென்றார் அதிகாரி .



அதைப், பற்றி சிந்தித்து இரவெல்லாம் அவருக்குத் தூக்கம் வரவில்லை. யாரிடம் கேட்பது? தவறு செய்ய பிறரிடம் கேட்பது அவமானம் இல்லையா? என்று குழம்பியது அவரது மூளை.



முடிவெடுக்கவும் முடியாமல் உறக்கமும் கொள்ளாமல் அவர் யோசித்துக் கொண்டே இருக்க பொழுதும் விடிந்தது.



பிறகு, அவரது அம்மா அறைக்குள் வந்தார். இரவெல்லாம் தூங்காததை மகனின் கண்கள் காட்டிக்கொடுத்தன.அவள் விளக்கம் கேட்பதற்குள் அவரே முந்திக்கொண்டார். நடந்த விஷயத்தை அப்படியே விவரித்தார்.



**“தவறான ஒரு காரியத்தை செய்யலாமா என்று நினைக்கும் போதே நமக்கு தூக்கம் போய ˙விடுகிறதே .தவறை நாம் செய்து விட்டால்,ஆயுளெல்லாம் நமக்கு தூக்கம் வராதே!”என்று சொல்லிச் சென்றாள் அவன் அம்மா.**




**அந்த நாள் முதல் அவர் முறைகேடான எந்தக் காரியத்தையும் ஏறெடுத்துப் பார்ப்பதையே தவிர்த்தார். தன் வாழ்வுக்குத் தேவையான அளவுக்கு செல்வங்கள் தானாகவே அவரிடம் நேர்மையான வழியில் வந்து சேர்ந்தன.**




**நீதி :**

**“நேர்மையே வெற்றிக்கான சிறந்த வழி”**


## 5. நண்டின் நற்செயல்



**ஒரு காட்டில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றில் மீன்களும், நண்டுகளும் வாழ்ந்து வந்தன. அதே, ஆற்றில் மோசமான கொக்கு ஒன்று இருந்தது.**



**அந்த கொக்கு மீன்களையும், நண்டுகளையும் சாப்பிட்டு வந்தது. அதனால், மீன்கள் மற்றும் நண்டுகளின் எண்ணிக்கை குறைந்தது. ஒரு நாள் கொக்கு அவர்களை அழைத்து பேசியது.**



**இந்த ஆற்றில் தண்ணீர் வற்ற போகுதாம். நாம் இனி இதில் வாழ முடியாது. நான் கூட வேறு இடத்திற்குச் சென்று விடுவேன். உங்களை நினைத்தால் தான் வருத்தமாக உள்ளது. உடனே மீன்கள் , கொக்கு அண்ணே!நீங்கள் செல்லும் இடத்திற்கு எங்களையும் அழைத்துச் செல்லுங்கள் என்றது. கொக்கிற்கு மிகவும் மகிழ்ச்சி.**



கொக்கு சரி என்று மீன்களை அதன் முதுகில் ஏற்றிச் சென்றது.




பிறகு, நண்டையும் அதேபோல் முதுகில் ஏற்றிச் சென்றது. தூக்கிச்செல்லும் வழியில் மீன்களின் எலும்பை நண்டு கவனித்தது. கொக்கு அண்ணே! “நாம் இப்போது எங்கு போகிறோம். இங்கு ஆறு எதுவும் இல்லையே”.



**நீ புத்திசாலிதான் நான் உன்னை சாப்பிடத்தான் அழைத்து வந்தேன். உன் நண்பர்களையும் சாப்பிட்டுவிட்டேன். கடைசியாக நீதான் உன்னால் இனி எதுவும் செய்ய முடியாது என்றது கொக்கு.**




**உடனே, நண்டு என் நண்பர்களையே ஏமாற்றி சாப்பிட்டு விட்டாய். உன்னை நான் விடப்போவதில்லை என்று சொல்லி அதன் கழுத்தை முறுக்கி விட்டது.**




உடனே, கொக்கு பறக்க முடியாமல் இறந்து விட்டது. நண்டும் அதன் உயிரை பொருட்படுத்தாமல் கொக்குடன் சேர்ந்து அதுவும் கீழே விழுந்து இறந்தது.

நீதி:




“எந்த வேலையை செய்தாலும் யோசித்து முடிவெடுக்க வேண்டும்” யார் சொல்வதையும் எளிதில் நம்பக்கூடாது.


# 6.ஏரி தவளையும் கிணற்று தவளைகளும்



**ஏரியில் கரைபுரண்டு வந்த வெள்ளத்தால், ஏரி தவளை ஒன்று வழி தவறி ஒரு கிணற்றுக்கு சென்றது .**




**அய்யோ....! அம்மா...! இது எந்த இடம் என்று தெரியவில்லையே?**



**கிணற்று தவளைகள் ஏரித் தவளையைப் பார்த்து நீ எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டன.**




**நான் ஏரியிலிருந்து வருகிறேன் என்றது. அதற்கு , கிணற்று தவளைகள் "ஏரியா? அப்படியென்றால் என்ன? அது எப்படி இருக்கும்?" என்று கேட்டனர். இந்த கிணற்றை விட பல மடங்கு பெரியது என்றது ஏரித்தவளை.**



பேசிக்கொண்டிருந்த தவளைகள் பசி எடுக்க உண்ண ஆரம்பித்தன. அப்போது ஏரித் தவளையும் உண்ண ஆரம்பித்தது. இதனை, கவனித்த கிணற்று தவளைகள் ஏரித் தவளையைப் பார்த்து இங்கு நமக்கே உணவு இல்லை. இதில் இது வேறு வந்துவிட்டது என்று பொறாமை கொண்டன.




அப்போது , கிணற்று தவளை ஏரித்தவளையைப் பார்த்து நீ அங்கு என்ன சாப்பிடுவாய்? எனக் கேட்டன. மீன், பூச்சி என இங்கு உள்ளதை விட நிறையவே கிடைக்கும் என்றது. நான் உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன் என்றது ஏரித்தவளை.



**“நீ பொய் சொல்கிறாய்!இந்தக் கிணற்றைப்போல பெரிய நீர் நிலை உலகில் கிடையவே கிடையாது” என்றன கிணற்றுத்தவளைகள்.**



**உடனே, எல்லா தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து “நீ பொய்யன், புரட்டன் உன்னை நம்பினால் ஆபத்து” என்று ஏரித் தவளையைத் தாக்கினர்.**




அடுத்தடுத்து , இரு நாட்களாய் அடைமழை பெய்தது.



நாம் அப்போதே அவன் பேச்சை கேட்டு இருந்திருக்கலாம். இப்போது உணவு கூட இல்லாமல் கஷ்டப்படுகிறோம்.




அப்போதுதான், ஏரித்தவளை அங்கு வந்து நண்பா! நாம் தப்பிக்க வழி கிடைத்துவிட்டது என்றது. கிணற்றுத் தவளைகள் ஏரித் தவளையிடம் என்னை மன்னித்துவிடு நண்பா! என்று மனவருந்திக் கேட்டன கிணற்றுத் தவளைகள்.



உடனே, ஏரித் தவளை கிணற்றுத் தவளைகளை அழைத்துச் சென்றன.




**தவளைகள் அனைவரும் ஒன்றாக கிணற்றை விட்டு வெளியேறின. கிணற்றுத் தவளைகள் ஏரித் தவளைக்கு "நன்றி நண்பா" எனக் கூறினர். பிறகு, அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக விளையாடினார்கள்.**




**நீதி :**

**"ஒன்று பட்டால், உண்டு வாழ்வு."**


# 7. முயலும் ஆமையும்




ஒரு கிராமத்தில் ஒரு ஆமையும் முயலும் இருந்தன. முயல் மிகவும் வேகமாக ஓடக்கூடியது. ஆனால், ஆமையால் வேகமாக ஓட முடியாது.




ஒருநாள் முயல், ஆமையைப் பார்த்து நாம் இருவருக்கும் ஒரு ஓட்டப்பந்தயம் வைத்துக் கொள்ளலாமா? என்றது. அதற்கு ஆமை , அட! “நம் இருவருக்கும் போட்டியா என்னைவிட நீ மிகவும் வேகமாக ஓடுவாயே”, நான் வரவில்லை என்றது ஆமை. அதற்கு நீ என்னுடன் போட்டியிட்டே ஆக வேண்டும் என்றது முயல்.



நாம் இங்கிருந்து அந்த சின்னமலை வரை போட்டி வைத்துக் கொள்ளலாம். போட்டி ஆரம்பித்தவுடன் முயல் தாவி ஓட ஆரம்பித்தது.



முயல், ஆமையைப் பார்த்தபோது தூரத்தில் வந்து கொண்டிருந்தது. அதனால், முயல் சிறிதுநேரம் ஓய்வெடுக்க நினைத்தது.



முயல் அசந்து தூங்கியது. ஆமையோ! இறுதி வரை எங்கும் சோர்வுற்று நிற்காமல் இறுதி கட்டத்தை அடைந்தது.




இறுதியில் , ஆமையே வெற்றி பெற்றது.

நீதி:



“முயற்சி திருவினையாக்கும் -முயன்றால் சாதிக்க முடியும்”


## 8. குரங்கும் முதலையும்




ஒரு பசுமையான காட்டில் குரங்கு ஒன்று மிகவும் சுவையான அத்திப்பழ மரத்தில் வசித்து வந்தது. அம்மரத்திற்குக் கீழே உள்ள ஆற்றில் முதலை ஒன்று மிகவும் பசியுடன் அவ்வழியாக வந்தது.




முதலை அண்ணே! உங்களுக்கு என்ன வேண்டுமென்று குரங்கு முதலையிடம் கேட்டது. தம்பி! எனக்கு மிகவும் பசியாக உள்ளது. அதான், உணவு தேடி இங்கு வந்தேன். உடனே, குரங்கு அம்மரத்தில் உள்ள அத்திப்பழங்களைப் பறித்து முதலைக்கு தந்தது.




முதலை, சிறிது பழங்களை எடுத்துக் கொண்டு அதன் மனைவிக்கு கொண்டு சென்றது. முதலையின் மனைவி மிகவும் ருசியாக உள்ளதே எங்கிருந்து கொண்டு வந்தீர்கள் எனக்கேட்க குரங்கு நண்பன்தான் எனக்கு இப்பழங்களைக் கொடுத்தான், என்றது .



இப்பழங்களே, இவ்வளவு ருசியாக உள்ளதே! இப்பழங்களை சாப்பிடுகின்ற முதலையின் இதயம் எவ்வளவு ருசியாக இருக்கும் . எனக்கு அக்குரங்கின் இதயம் வேண்டுமென்றது. அவன் என்னுடைய நண்பன் என்னால் அழைத்து வர முடியாது என்றது முதலை. முதலையின் மனைவியோ மிகவும் அடம்பிடிக்க சரி என்று சென்றது முதலை.



முதலையோ, குரங்கை அதன் முதுகின் மேல் வைத்து அழைத்து வந்து கொண்டிருந்த வழியில் குரங்கிடம் முதலை அதன் மனைவி கூறிய அனைத்தையும் உளறிவிட்டது.



குரங்கிற்கு திடீரென்று , ஒரு யோசனை தோன்றியது. முதலை அண்ணே! இதை முன்பே சொல்லியிருக்கலாமே, என் இதயம் பத்திரமாக இருக்க வேண்டுமென்று மரத்திலே கழட்டி வைத்து விட்டேன் என்றது குரங்கு.



முதலையோ, குரங்கு சொன்னதை நம்பி அம்மரத்தின் அருகில் கூட்டிச் செல்ல குரங்கோ, மரத்தின் கிளையில் தாவியது. “முட்டாள் முதலையே , யாராவது இதயத்தைக் கழட்டி வைத்துக் கொண்டால் உயிர் வாழ முடியுமா? நான் உனக்கு சாப்பிடப் பழங்கள் தந்தால் நீ என்னையே சாப்பிடப் பார்க்கிறாயா? இனி நான் உன் பக்கமே வர மாட்டேன் என்று தாவிச் சென்றது.

**நீதி:**



**“ஆபத்து நேரங்களில் அதைக்கண்டு அஞ்சாமல், அந்த ஆபத்தை இந்த குரங்கைப்போல் புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும்”.**

**மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்:**

திரு. கோ. நாகராஜன் B.A., (நிறுவனர்)

திருமதி நா. பிரகதாம்பாள்., B.A., (தாளாளர்)

Rtn. Dr. நா. முரளிதரன், M.A.,M.Phil,B.Ed., D.Litt(USA), (முதல்வர்)

திருமதி. Dr.சு. அருணா முரளிதரன், M.Sc.,B.Ed.,M.Phil,

(துணை முதல்வர்)

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:**

நல்லாசிரியர் திருமதி இரா. கமலா., B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திருமதி ந. விஜயலெட்சமி, M.A.,B.Ed.,(துணை முதல்வர்)

திருமதி. ஸ்ரீ. புவனேஸ்வரி, B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திரு.அ. ராஜதுரை, M.Sc., M.Phil, B.Ed.,

(ஒருங்கிணைப்பாளர்)

திருமதி.வெ. கவிதா, M.Sc., B.Ed., (ஒருங்கிணைப்பாளர்)

**முதல் பதிப்பு: May - 2025**

**வடிவமைப்பு**

திருமதி. ந. இராதிகா, B.Lit., DCA.,DOA

செல்வி. S.அட்சயா, M.Sc.,

**அச்சுரிமை:**

நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்.